சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை

# சுற்றுலா

## மானியக் கோரிக்கை எண் – 29

# கொள்கை விளக்கக் குறிப்பு

## 2012–2013


**எஸ். கோகுல இந்திரா**
**சுற்றுலாத் துறை அமைச்சர்**



©
தமிழ்நாடு அரசு
2012

# சுற்றுலா

# மானியக் கோரிக்கை எண். 29

## 2012–2013 – ஆம் ஆண்டுக்கான

## கொள்கை விளக்கக் குறிப்பு

## பொருளடக்கம்


| வ. எண். | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | உலகளாவிய சுற்றுலா கண்ணோட்டம் | 2 |
| 3. | இந்தியாவில் சுற்றுலாத்துறை | 5 |
| 4. | தமிழ்நாட்டில் சுற்றுலாத்துறை | 7 |
| 5. | கலையுணர்வின் உச்சம், பண்பாட்டு அற்புதம் பொதிந்த சிற்பங்கள் | 10 |
| 6. | சுற்றுலா தொலைநோக்கு | 11 |
| 7. | சுற்றுலா செயலாக்கம் | 12 |
| 8. | சுற்றுலா மேம்பாட்டு உத்திகள் | 13 |
| 9. | சுற்றுலாப் பயணிக்கு தரமான சுற்றுலா அனுபவத்தை உறுதி செய்தல் | 15 |
| 10. | தமிழ்நாட்டிற்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை | 16 |
| 11. | சுற்றுலாத் தலங்களில் அடிப்படை வசதிகள் | 17 |
| 12. | 2011–2012 ஆம் ஆண்டில் ஒப்பளிக்கப்பட்ட திட்டங்களின் விபரம்<br>I. மாநில அரசு நிதி உதவித் திட்டங்கள்<br>II. பகுதி–2 திட்டங்கள் | <br><br>18<br>21 |
| 13. | சுற்றுலா சாலைகள் மேம்பாடு | 22 |

| | | |
|---|---|---|
| 14. | 2011–2012–ம் ஆண்டின் தமிழ்நாட்டின் சுற்றுலாப் பகுதிகளில் சாலை மேம்பாட்டுத் திட்டங்கள் | 23 |
| 15. | மத்திய அரசு நிதி உதவித் திட்டங்கள் | 26 |
| 16. | சுற்றுலா பெருந்திட்டங்கள் | 26 |
| 17. | சுற்றுலா தல மேம்பாட்டிற்கு 2011–2012 ஆம் ஆண்டில் ஒப்பளிக்கப்பட்ட மத்திய அரசு நிதி உதவித் திட்டங்கள் | 27 |
| 18. | ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடன் சுற்றுலா உள்கட்டமைப்பு மேம்பாட்டு முதலீட்டு திட்டம் | 28 |
| 19. | சுற்றுலா வகைகள் | 32 |
| 20. | 2011–2012 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட விழாக்கள் | 43 |
| 21. | ஜல்லிக்கட்டு | 45 |
| 22. | <u>மனித வள மேம்பாடு</u><br><br>அ) சுற்றுலா வழிகாட்டிப் பயிற்சி திட்டம்<br>ஆ) திறன் வளர்ப்புப் பயிற்சி<br>இ) ஆற்றல் மேம்பாட்டுப் பயிற்சி | <br><br>46<br>47 |
| 23. | சுற்றுலா பாதுகாப்பு அமைப்பு | 48 |
| 24. | விளம்பரம் மற்றும் சந்தைப்படுத்துதல் | 49 |
| 25. | சுற்றுலா மேம்பாட்டிற்கான உத்திகள் | 52 |
| 26. | தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் | 61 |
| 27. | <u>இணைப்பு</u><br><br>1. தமிழ்நாடு சுற்றுலா ஓர் கண்ணோட்டம்<br>2. சுற்றுலா அலுவலகங்கள் மற்றும் சுற்றுலா தகவல் மையங்கள்<br>3. தமிழ்நாட்டிலுள்ள பாரம்பரிய நகரங்கள் | <br><br>68<br>70<br>73 |

# சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை

## சுற்றுலா

## கொள்கை விளக்கக் குறிப்பு – 2012 - 2013

### முன்னுரை

சுற்றுலா என்பது மனமகிழ்ச்சி அல்லது ஓய்வுக்காக பயணம் மேற்கொள்ளுதல் ஆகும். வழக்கமாக வாழும் சூழலில் இருந்து விலகி, பரபரப்பு இல்லாத சூழலில் ஓய்வு எடுக்கவும், வணிக நோக்கம் அல்லது இதர காரணங்களுக்காக, தனது பணியாற்றும் இடத்திற்கு தொடர்பு இல்லாத ஊர்களுக்குப் பயணம் சென்று, அங்கு ஓராண்டிற்கு குறைவாக தங்கி இருப்பவர்களை சுற்றுலாப் பயணிகள் என்று உலக சுற்றுலா அமைப்பு வரையறுத்துள்ளது.

வேலை வாய்ப்புகளை பெருமளவு உருவாக்கி வறுமையை ஒழிப்பதன் மூலம், பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கும் அங்கமாக சுற்றுலாத் துறை

திகழ்கின்றது. வேலை வாய்ப்புகளை உருவாக்குதல், வருவாய், அந்நிய செலவாணி ஈட்டுதல், மண்டலவாரியான வளர்ச்சி ஆகிய பொருளாதார மேம்பாடுகளுக்கு சுற்றுலாத் துறை வழிவகுப்பதால், அதன் வளர்ச்சி ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் உந்து சக்தியாகவும் விளங்குகிறது.

பொருளாதார தாராளமயமாக்கல், வெளிப்படையான விமான போக்குவரத்துக் கொள்கை, சொகுசு கப்பல் சேவைகள், மேம்படுத்தப்பட்ட சாலை வசதி, சுற்றுலா இரயில்கள், அதிகரித்துவரும் வணிகம் தொடர்பான பயணங்கள், மின்னணு முன்பதிவு வசதிகள் ஆகியவற்றால் சுற்றுலாத் துறை மற்ற துறைகளுக்கு முன்மாதிரியாகத் திகழும் வகையில் உருவெடுத்துள்ளது. சாதாரண சேவையாற்றும் தொழில் துறையாக இருந்த சுற்றுலா, தற்போது மிகப்பெரிய அளவில் வருவாய் ஈட்டும் தொழில்துறையாக உருவெடுத்துள்ளது.

## உலகளாவிய சுற்றுலா கண்ணோட்டம்

பொறுப்புணர்வுடன் கூடிய, தன்னிறைவுள்ள, உலக அளவில் அனைவராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதில் உலக சுற்றுலா

அமைப்பு (World Tourism Organisation) பெரும் பங்காற்றுகிறது. குறிப்பாக, வளர்ந்து வரும் நாடுகளின் நலனில் இந்த அமைப்பு அதிக கவனம் செலுத்தி வருகின்றது.

சுற்றுலா என்பது ஆடம்பரமான, பொருளாதார, வசதிமிக்க செல்வந்தர்கள் மட்டுமே அனுபவிக்கக் கூடியது என்ற கண்ணோட்டம் மாறி, சுற்றுலா என்பது வாழ்க்கை முறை என்ற மதிப்பை மக்கள் மத்தியில் தற்போது பெற்றுள்ளது. அந்நிய செலாவணி வருமானம், உள்நாட்டு வரி வருவாய் ஈட்டுதல் ஆகிய காரணங்களால் சுற்றுலாத் துறை உலக அளவில் மிகப்பெரிய சேவையாற்றும் தொழில் துறையாக வளர்ந்துள்ளது.

போக்குவரத்து, தகவல் தொடர்பு துறைகளில் ஏற்பட்டுள்ள அபரிமிதமான வளர்ச்சியால், அடுத்த பத்தாண்டுகளில் சுற்றுலாத் துறை உலக அளவில் இரட்டிப்பு வளர்ச்சியை அடைய உள்ளது. 21–ஆம் நூற்றாண்டில் சுற்றுலாப் பயணம் செல்பவர்களின் எண்ணிக்கை, குறிப்பாக வளர்ந்த நாடுகளில் மிகப் பெரிய அளவு வளர்ச்சி அடையும். பொதுவாக, மக்கள் தங்களுக்கு கிடைக்கின்ற விடுமுறைகளில், தங்களுடைய வசதி மற்றும் காலச் சூழ்நிலைக்கேற்ப, அருகில் உள்ள

மற்றும் தொலைதூரப் பகுதிகளுக்கும் சுற்றுலாப் பயணம் மேற்கொள்கின்றனர். தொழில் துறையில் உள்ள எல்லா தொழில்களை விட பன்மடங்கு வளர்ச்சியடையும் தலையாய இடத்தை சுற்றுலாத் துறை பெற்றுள்ளது. ஓரிடத்தில் சம்பாதிக்கக் கூடிய செல்வம், சுற்றுப் பயணம் செல்வதால் வேறு இடத்தில் செலவழிக்கப்படுகிறது. இதனால் பணப் பரிமாற்றத்திற்கு மிகச் சிறந்த மார்க்கமாக சுற்றுலாத் துறை விளங்குகிறது.

சுற்றுலாத்துறை அதிக அளவில் வேலை வாய்ப்பை உருவாக்குவதோடு, ஒவ்வொரு ஒன்பது நபர்களுக்கு ஒருவர் வீதம், சுற்றுலாத்துறை மூலமாக வேலை வாய்ப்பு கிடைக்கிறது. முதலீடு செய்யப்படும் ஒவ்வொரு பத்து இலட்சம் ரூபாயின் மூலம் உற்பத்தித் துறையில் 13 பேருக்கும், வேளாண்மைத் துறையில் 45 பேருக்கும், சுற்றுலாத் துறை உணவகங்கள் மற்றும் விடுதிகளில் 89 பேருக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கின்றது. அனைத்து நாடுகளும், தீவிர வளர்ச்சி அடைய சுற்றுலாத் துறை ஒரு முக்கியத் துறையாக கருதப்படுகின்றது. அந்நிய செலாவணி ஈட்டுவதில் வேகமாக வளர்ந்து வரும் துறையாக இருப்பதால், சுற்றுலாத் துறைக்கு வளர்ச்சியடைந்த நாடுகள் அதிக முன்னுரிமை அளிக்கின்றன. சுற்றுலாப் பயணிகளுக்கு பாதுகாப்பான,

சௌகரியமான பயணத்தை அளிப்பதில் சுற்றுலா சேவை அளிக்கும் நிறுவனங்கள் பிரதான பங்கு வகிக்கின்றன.

**இந்தியாவில் சுற்றுலாத்துறை**

சர்வதேச சுற்றுலாப் பயணிகள் செலவழிக்கும் தொகையின் அடிப்படையில், ஆசிய கண்டத்தில் வேகமாக வளர்ந்து வரும் சந்தையாக இந்தியா விளங்குகின்றது. இந்தியா வியப்பூட்டும் உலக அதிசய சின்னங்கள், கோட்டைகள், அரண்மனைகள், கோவில்கள், கடற்கரைகள், நீர்வீழ்ச்சிகள், வன உயிரின சரணாலயங்கள், நினைவகங்கள், இசை, நடனம், கலாச்சாரம் ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்தியாவில் பண்டைக் காலத்திற்கும், நவீன காலத்திற்கும் ஏற்ற சிறப்புமிக்க பண்பாடு உள்ளது.

உலக அளவில் மிகப் பழமையானதும், வளமானதும், பன்முகத்தன்மை வாய்ந்ததுமாக இந்திய பண்பாடு திகழ்கின்றது. இந்தியாவின் இயற்கை அழகு, வனப்பு, நம்பிக்கைகள், தத்துவங்கள், வாழ்க்கை முறை ஆகிவற்றால் ஈர்க்கப்பட்டு, வெளிநாட்டு பயணிகள் அதிகமாக இந்தியாவிற்கு வருகை தருகிறார்கள். அனைத்து மனிதர்களும் பயணம் செய்வதற்கு

ஏங்கக் கூடியதும், ஒருமுறை வந்து சென்றால் மறக்க முடியாத வண்ணம், உலக அதிசயங்கள் அனைத்தையும் அனுபவித்த உணர்வை அளிக்கும் ஒரே நாடாக இந்தியா உள்ளது. இதனால் அன்னியச் செலாவணி அதிக அளவில் கிடைக்கிறது.

சர்வதேச அளவில் ஒப்பிடுகையில், நமது நாட்டில் கண்டறியப்பட்டுள்ள அளவை விட, கண்டறியப்பட வேண்டிய, அனுபவிக்கப்படாமல் பொதிந்துள்ள சுற்றுலா வளம் மிக அதிகமாக உள்ளது. இவ்வாறு கண்டறியப்பட வேண்டிய நமது சுற்றுலா வளத்தைக் கண்டறியும் நோக்கில், பன்னிரண்டாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றலாப் பயணிகளின் வருகையில் 12 சதவிகித வளர்ச்சியை இலக்காக இந்திய சுற்றுலாத் துறை அமைச்சகம் நிர்ணயித்துள்ளது. இந்த இலக்கின் அடிப்படையில் வளர்ச்சி விகிதம் தொடர்ந்தால், சுற்றுலாத் துறை மூலம் 2.5 கோடி கூடுதல் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும்.

மத்திய அரசின் சுற்றுலா அமைச்சகம் **தூய்மையான இந்தியா இயக்கம்** என்ற திட்டத்தை சமீபத்தில் தொடங்கியுள்ளது. பொது இடங்களில் சுத்தம்

மற்றும் சுகாதாரம் நல்ல முறையில் இருப்பதை உறுதி செய்வதே இந்த தூய்மை இயக்கத்தின் முக்கிய நோக்கம். பொது இடங்கள் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் திகழ்வதன் அவசியத்தை சமூகத்தின் அனைத்து தரப்பினர்க்கும் உணர்த்துவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இது குறித்த அறிவுரைகள், கல்வி, பயிற்சி, செயல் விளக்கம் மூலம் சமூகத்தின் அனைத்து தரப்பையும் வலியுறுத்தல் ஆகிய பணிகள் இத்திட்டத்தில் இடம்பெறும்.

**தமிழ்நாட்டில் சுற்றுலாத்துறை**

பலதரப்பட்ட தனிச் சிறப்பு பெற்ற சுற்றுலா வளம் பொருந்திய மாநிலம் தமிழ்நாடு. வானுயர்ந்த மலைத் தொடர்கள், வெள்ளிக் கம்பிகள் போன்ற நீர்வீழ்ச்சிகளும், பசும்புல் பட்டாடை அணிந்த தாவரவளம், மணற்பாங்கான கடற்கரைகள், பிரம்மாண்டமான நினைவுச் சின்னங்கள், காலத்தை வென்று நிற்கும் கோவில்கள், அற்புதமான வன உயிரினங்கள், கண்ணையும் கருத்தையும் கவரும் சிற்பங்கள், அர்த்தமுள்ள கிராம வாழ்க்கை ஆகிய வளங்கள் தமிழ்நாட்டில் உள்ளன. சித்திரம் தீட்டியது போன்ற இயற்கை வெளிகள், தொடர்ந்து கடைபிடிக்கப்படும்

பாரம்பரியம், பண்பாடுகளின் கூடல், அழகியலின் உன்னதம் ஆகிய அனைத்தும் தமிழ்நாட்டின் தனிப் பெருமைகளாக உள்ளன.

சுற்றுச்சூழல், பண்பாட்டு தன்னிறைவு, அனைவரையும் உள்ளடக்கிய சமூக நல்லிணக்கம், பாதுகாப்பு ஆகியவற்றின் மூலம் சுற்றுலாத் துறை செம்மையடைகின்றது. இந்த வளர்ச்சியினால் பின்வரும் பலன்களை அடைய முடியும்:–

1. சுற்றுலாப் பயணிகளின் வருகை மற்றும் தங்கும் கால அளவு அதிகரிப்பு.
2. சுற்றுலாத்துறை மூலம் பணப் பரிமாற்றம் மற்றும் இலாபம் அதிகரிப்பு.
3. இயற்கையோடு இயைந்த பண்பாட்டு பாரம்பரிய சுற்றுலாத் தலங்கள் மேம்பாடு அடையும். அதன் பயன்கள் பின்வருமாறு:–

 - அதிக வளமுள்ள சுற்றுலாப் பகுதிகள் ஒருங்கிணைந்த வளர்ச்சி பெற, கூடுதல் முன்னுரிமை அளித்து அங்கு சுற்றுலா உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்.

- மேம்பட்ட தொடர்பு வசதிகள், தரமான சுற்றுச் சூழல், சுற்றுலா சேவைகள் மற்றும் பயன்பாடுகள்.

- பல்வேறு நிறுவனங்களின் கூட்டு முயற்சியினை ஒருங்கிணைத்து மேம்பாட்டிற்கு வழி செய்தல்.

- சுற்றுச்சூழல் மற்றும் பண்பாட்டு தன்னிறைவுள்ள, சமூக நல்லிணக்கம் பொருந்திய சுற்றுலா வளர்ச்சி.

- சுற்றுலா வளர்ச்சியில் தனியார் துறை மற்றும் சமூகப் பங்கேற்பை ஊக்குவித்தல்.

- தன்னிறைவு பெற்ற சுற்றுலாவிற்கான திறன் வளர்ப்பு மற்றும் மனித வள மேம்பாடு, வேலை வாய்ப்பை உருவாக்குதல், வறுமை ஒழிப்பு, சுற்றுச் சூழல் மறு உருவாக்கம், பெண்கள் மற்றும் பின்தங்கிய பிரிவுகளின் முன்னேற்றம் ஆகியவற்றை உள்ளடக்கிய சுற்றுலாத் தல மேலாண்மை.

**கலையுணர்வின் உச்சம், பண்பாட்டு அற்புதம் பொதிந்த சிற்பங்கள்**

தமிழ்நாடு அளவில்லா சுற்றுலா வளம் மற்றும் ஈடு இணையற்ற பண்பாட்டு வளம் பொதிந்த மாநிலமாகும். தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சுற்றுலாத் தலங்களுக்கும் சர்வதேச, வெளிமாநில சுற்றுலாப் பயணிகள் அலைகடலென, ஆண்டு முழுவதும் திரண்டு வருகின்றனர். சுற்றுலா பருவ காலங்களில் தமிழக சுற்றுலாத் தலங்கள், சுற்றுலாப் பயணிகளால் நிரம்பி வழிகின்றன. சுற்றுலாப் பயணிகளின் நலனுக்காக, அடிப்படை வசதிகளான கழிப்பறைகள், ஓய்வுக் கூடங்கள், குடிநீர், அணுகு சாலை மேம்பாடு, வாகன நிறுத்துமிடம், பூங்காக்கள், படகுக் குழாம் மேம்பாடு, ஒளி விளக்குகள் உள்ளிட்ட பல வசதிகளை வழங்க தமிழ்நாடு சுற்றுலாத்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

**சுற்றுலா தொலைநோக்கு**

- சர்வதேச அளவில் சுற்றுலாப் பயணிகளைக் ஈர்க்கும் தலைசிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உயர்த்துதல்.

- வளமான பண்பாட்டு பாரம்பரியம் மற்றும் கட்டிடக் கலைநயம் மிகுந்த நினைவுச் சின்னங்களைப் பாதுகாத்தல்.

- சுற்றுலா மேம்பாட்டில் தமிழ்நாட்டை முதல் மாநிலமாக உயர்த்துதல்.

- சென்னையில் **22–3–2012** அன்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் **“தொலைநோக்கு தமிழ்நாடு–2023”** என்ற ஆவணம் வெளியிடப்பட்டது. இந்த ஆவணத்தில், தமிழகத்தில் சுற்றுலா கட்டமைப்புத் திட்டங்களை செயல்படுத்திட மொத்தம் ரூ.**10,000** கோடி தேவை எனவும், இதனால் **2023–**ஆம் ஆண்டில் தமிழகத்திற்கு வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை **1.5** கோடியாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சுற்றுலா செயலாக்கம்**

- தமிழ்நாடு தன்னிறைவுள்ள மாநிலமாக வளர்ச்சியடைய, முழு ஆற்றலுடன் குறிப்பிடத்தக்க அளவில் சுற்றுலாத்துறை பங்காற்றுதல்.

- உலகத்தரம் வாய்ந்த, அதே சமயம் பாரம்பரியம் மிக்க மகிழ்ச்சியான அனுபவத்தை சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்குதல்.

- இயற்கை வளங்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத வகையில் சுற்றுலாத் தலங்களில் முன்னேற்றத்திற்கான முதலீட்டுத் திட்டங்களை உருவாக்குதல்.

- சுற்றுலாத் துறையால் சமுதாயம் பயன்பெற்று, அதன் பங்களிப்பினை மதிப்பிடுதல்.

- பிரபலமான உலக சுற்றுலா சின்னமாக தமிழ்நாட்டை அமைத்தல்.

- இந்தியாவில் தமிழக சுற்றுலாவின் பங்களிப்பினை அதிகரித்தல்.

- சுற்றுலாவின் மூலம் மாநிலத்தின் வருமானத்தை அதிகரித்து, அதன்மூலம் அனைத்து துறைகளிலும் வளர்ச்சியை உறுதி செய்தல்.

**சுற்றுலா மேம்பாட்டு உத்திகள்**

- வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவர, முக்கிய சுற்றுலாத் தலங்களை பன்னாட்டு தரத்திற்கு இணையாக மேம்படுத்துதல்.
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் அதிகம் பிரபலமாகாத சுற்றுலா தலங்கள், அருவிகள் மற்றும் அணைக்கட்டு பகுதிகளை மேம்படுத்துதல்.
- புனிதத் தலங்களை மேம்படுத்த, அங்கு சுற்றுலா கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்.
- ஊரக வேலை வாய்ப்பினை பெருக்கவும், மாற்று சுற்றுலாத் தலங்களை அளித்திடவும் ஊரகச் சுற்றுலாவை மேம்படுத்துதல்.

- மாநிலத்தில் உள்ள பல்நோக்கு சிறப்பு மருத்துவமனைகளில் அனைத்து தரப்பினரும் ஏற்கத்தக்க கட்டணத்தில் தரமான மருத்துவச் சேவைகளை அளித்தல் மூலம் மருத்துவச் சுற்றுலாவை ஊக்கப்படுத்துதல்.

- தமிழ்நாட்டை ‘**மைஸ்**’ சுற்றுலா நிகழ்ச்சிகள் (**MICE**-கூட்டங்கள், ஊக்கத் தொகை, மாநாடுகள் மற்றும் பொருட்காட்சிகள்) நடத்துவதற்கான சிறந்த இடமாக மேம்படுத்தி, குழுவாக சுற்றுலாப் பயணிகளைக் கவர்தல்.
- பொங்கல் விழா, இந்திய நாட்டிய விழா, சித்திரை சுற்றுலா விழா, பாரம்பரிய விழா போன்றவை குறித்து விளம்பரம் செய்தல்.
- கலைகள், கைவினைப் பொருட்கள், நாட்டுப்புறக் கலைகள், கிராமிய உணவு வகைகள் முதலியவற்றை சுற்றுலா மூலமாக பிரபலமாக்குதல்.
- இந்தியா மற்றும் வெளிநாடுகளின் முக்கிய நகரங்களில் சுற்றுலா விளம்பர முகாம்கள்

நடத்துதல் மற்றும் பன்னாட்டு பயண சந்தைகளில் கலந்து கொள்ளுதல்.

- சாகச சுற்றுலா, உல்லாச கப்பல் சுற்றுலா, நட்சத்திர ஒட்டல் மற்றும் ரிசார்ட்கள், வாடகை விமான சுற்றுலா, ஹெலிகாப்டர் டாக்சி மற்றும் பெட்ரோல் பங்குகள் அருகில் சாலையோர வசதி மையங்கள் ஏற்படுத்துதல் போன்றவற்றில் தனியார் வர்த்தக நிறுவனங்கள், எண்ணெய் நிறுவனங்கள் ஆகியவற்றின் பங்கேற்பை ஊக்கப்படுத்துதல்.

- சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் பிரிவுகளில் பல்வேறு கல்வி நிறுவனங்களின் மேலாண்மை படிப்புகளின் மூலம் மனித வள மேம்பாட்டை உருவாக்குதல் மற்றும் சுற்றுலா வழிகாட்டிகளுக்கு பயிற்சி அளித்தல்.

**சுற்றுலாப் பயணிக்கு தரமான சுற்றுலா அனுபவத்தை உறுதி செய்தல்**

சுற்றுலாத் தொழிலில் சுற்றுலா பயணிதான் முக்கியமானவர். போட்டிகள் மிகுந்த சுற்றுலாச்

சந்தையில், தரமான சேவை அளித்து, வாடிக்கையாளர்களின் திருப்தியை மேம்படுத்துவதன் மூலமாக மட்டுமே ஒரு சுற்றுலாத் தலம் வளர்ச்சி அடையும். சுற்றுலாத் தலங்களில் அடிப்படை வசதிகளை உருவாக்குதல், சுற்றுலாப் பயணிகள் அதிகம் கூடும் இடங்கள், உணவகம் மற்றும் விடுதிகளில் இடைவிடாத விருந்தோம்பல், சுற்றுலாப் பயணிகள் விரும்பும் இடங்களில் வசதிகளை மேம்படுத்தி தொடர்ந்து சிறப்பாகப் பராமரித்தல் ஆகியவற்றிற்கு முக்கித்துவம் அளிப்பதன் மூலம், சுற்றுலாப் பயணிகளை திருப்தியடையச் செய்ய முடியும். இதனால், சுற்றுலா மையங்களுக்கு பலமுறை வந்து, நீண்ட நாட்கள் தங்குவதற்கு, சுற்றுலாப் பயணிகள் ஊக்கப்படுத்தப்படுகின்றனர்.

**தமிழ்நாட்டிற்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை**

| ஆண்டு | உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் (இலட்சங்களில்) | வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் (இலட்சங்களில்) |
|---|---|---|
| 2009 | 1157.56 | 23.69 |
| 2010 | 1116.37 | 28.05 |
| 2011 | 1367.51 | 33.08 |

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதில் இந்தியாவில் இரண்டாவது இடத்தையும், உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதில் மூன்றாவது இடத்தையும் தமிழ்நாடு பெற்றுள்ளது. மேலும் மருத்துவ சுற்றுலா மேம்பாட்டிலும் தமிழ்நாடு முன்னணி மாநிலமாகத் திகழ்கின்றது.

**சுற்றுலாத் தலங்களில் அடிப்படை வசதிகள்**

முக்கியமான சுற்றுலாத் தலங்களின் அடிப்படை வசதிகளுக்கான திட்டங்களை, தொடர்புடைய அரசுத் துறைகள், அனுபவம் வாய்ந்த ஆலோசகர்களுடன் இணைந்து சுற்றுலாத் துறை தயாரிக்கின்றது. சுற்றுலாத் தலங்களில் தரமான அடிப்படை வசதிகள் அளிக்கப்படுவதை உறுதி செய்ய, அப்பணிகளை செயல்படுத்தும் தொடர்புடைய அரசுத் துறைகள், உள்ளாட்சி அமைப்புகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து செயல்படுத்துவது இன்றியமையாததாகும். எல்லா சுற்றுலாத் தலங்களிலும் தரமான கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சுற்றுலாத் துறையின் நிதியுதவியுடன்

மேற்கொள்ளப்படும் பணிகளில் ஈடுபட்டுள்ள மற்ற அரசுத் துறைகளும் குறித்த நேரத்தில் பணிகளை முடிப்பதற்காக, ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.

மிக அதிக அளவிலான பக்தர்களை ஈர்க்கும் துறையாக ஆன்மீக சுற்றுலா திகழ்கின்றது. எனவே, ஆன்மீகத் தலங்களில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவது மிகவும் இன்றியமையாததாகும். ஆன்மிகத் தலங்கள், மலைவாழிடங்கள், சுற்றுலா வரவேற்பு மையங்கள் ஆகிய இடங்களில், தேவையை அறிந்து, மாநில அரசின் நிதி உதவியுடன் அப்பகுதிகளில் பின்வரும் மேம்பாட்டுப் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன.

## 2011–2012 ஆம் ஆண்டில் ஒப்பளிக்கப்பட்ட திட்டங்களின் விவரம்

### I. மாநில அரசு நிதி உதவித் திட்டங்கள்

| வ. எண். | திட்டங்களின் விவரம் | தொகை (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம்– அம்மா மண்டபம் சாலையில் நடைபாதை மேற்கூரை அமைத்தல் | 100.00 |

| | | |
|---|---|---|
| 2 | அரியலுார் மாவட்டம், ஏலாக்குறிச்சி அடைக்கல மாதா ஆலயப் பகுதியில் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் | 22.00 |
| 3 | நாமக்கல் மாவட்டம், கொல்லி மலையில் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் | 137.16 |
| 4 | திருவாரூர் மாவட்டம், ஸ்ரீவாஞ்சியத்தில் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் | 43.60 |
| 5 | சிவகங்கை மாவட்டம் திருக்கோஷ்டியூரிலுள்ள ஸ்ரீ சௌமிய நாராயணப் பெருமாள் கோவில் பகுதியில் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் | 56.00 |
| 6 | விருதுநகர் மாவட்டத்தில் ரமண மகரிஷி பிறந்த ஊரான திருச்சுழியில் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் | 24.78 |
| 7 | திருநெல்வேலி மாவட்டம் ஆய்க்குடியில் உள்ள அருள்மிகு. பாலசுப்ரமணியர் கோவில் பகுதியில் ‘தங்கும் விடுதி’(டார்மிட்டரி) கட்டுதல் | 25.00 |

| | | |
|---|---|---|
| 8 | விருதுநகர் மாவட்டம் இருக்கன்குடியிலுள்ள அருள்மிகு. மாரியம்மன் கோவில் மற்றும் திருத்தலங்களில் உள்ள அருள்மிகு நின்றநாராயண பெருமாள் கோவிலைச் சுற்றியுள்ள பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் | 40.00 |
| 9 | திருவாரூர் மாவட்டத்திலுள்ள அருள்மிகு. இராஜகோபாலசுவாமி கோவில், ஜாம்புவானோடை தர்கா மற்றும் முத்துப்பேட்டை கடற்கரை காயல் (லகூன்) பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் | 103.98 |
| 10 | சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் சுற்றுலா வரவேற்பு மையம் கட்டுதல் | 35.00 |
| 11 | புதுக்கோட்டை மாவட்டம், கோடியக்கரை பகுதியில் மணமேல்குடி கிராமத்தில் உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் | 38.00 |
| 12 | சிவகங்கை மாவட்டம் திருமலைக் கொழுந்தீஸ்வரர் கோவில் பகுதியில் உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் | 16.39 |
| 13 | இராமநாதபுரம் மாவட்டம் இராமேசுவரத்தில் சுற்றுலா இல்லம் கட்டுதல் | 200.00 |

| | | |
|---|---|---|
| 14 | நாகப்பட்டினம் மாவட்டம் திருக்கடையூரில் சுற்றுலா இல்லம் கட்டுதல் | 120.00 |
| 15 | தூத்துக்குடி மாவட்டம், மணல்மாதா திருத்தலப் பகுதியில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல் | 25.00 |
| | **மொத்தம்** | **986.93** |

## II. 2011–2012 ஆம் ஆண்டில் பகுதி–2 திட்டத்தின் கீழ் ஒப்பளிக்கப்பட்ட திட்டங்கள்

| வ. எண். | திட்டங்களின் விவரம் | தொகை (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூரில் சுற்றுலா வரவேற்பு மையம் கட்டுதல் | 30.00 |
| 2 | திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலையில் சுற்றுலா வரவேற்பு மையம் கட்டுதல் | 32.00 |
| 3 | சேலம் மாவட்டம், ஏற்காட்டிலுள்ள ஏரியை தூர் வாருதல் | 30.00 |
| 4 | திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலில் குறிஞ்சி மலர் பூங்கா அமைத்தல் | 15.20 |

| | | |
|---|---|---|
| 5 | தூத்துக்குடி மாவட்டம், கொற்கையில் மேம்பாட்டுப் பணிகள் செய்தல் | 35.00 |
| 6 | நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் உள்ள சுற்றுலா வரவேற்பு மையத்தை மேம்படுத்துதல் | 20.00 |
| 7 | காஞ்சிபுரம் மாவட்டம், மாமல்லபுரத்தில் உள்ள சுற்றுலா வரவேற்பு மையத்தை மேம்படுத்துதல் | 30.00 |
| 8 | சென்னையிலுள்ள சுற்றுலா ஆணையர் அலுவலகத்தை புனரமைத்தல் | 28.00 |
| | **மொத்தம்** | **220.20** |

**சுற்றுலா சாலைகள் மேம்பாடு**

தமிழ்நாடு சிறந்த சாலை இணைப்பு வசதிகளைப் பெற்றுள்ளது. சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக, சுற்றுலா தலங்களுக்குச் செல்லும் அணுகு சாலைகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

## 2011–2012 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் சுற்றுலாப் பகுதிகளில் சாலை மேம்பாட்டுத் திட்டங்கள்

| வ. எண். | மாவட்டத்தின் பெயர் | பணிகளின் விவரம் | தொகை (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | தூத்துக்குடி | தென்திருப்பேரை–ஏரல் சாலை மேம்பாடு (0/0–1/4 கி.மீ.) | 55.00 |
| | | ஆயத்துறை – மங்களக்குறிச்சி சாலை (0/0 – 1/8 கி.மீ.) மேம்பாடு. | 150.00 |
| | | திருவைகுண்டம் பேருந்து நிலையச் சாலை (0/0 – 0/2 கி.மீ.) மேம்பாடு. | 25.00 |
| 2 | கோயம்புத்தூர் | மேட்டுப்பாளையம்–நெல்லித்துறை சாலை (1/6 – 4/0 கி.மீ.) மேம்பாடு (வன பத்ரகாளியம்மன் கோவில் சாலை) | 80.00 |
| 3 | ஈரோடு | பவானி–அந்தியூர்–கொள்ளேகால் சாலை–குருநாதசுவாமி கோவில் சாலை (0/0 – 1/6 கி.மீ.) மேம்பாடு | 27.00 |

| | | | |
|---|---|---|---|
| 4 | தருமபுரி | ஒகேனக்கல்–பென்னாகரம், தருமபுரி –அந்தியூர்– திருப்பத்துார் சாலை (9/2 – 9/8 கி.மீ.) பாதுகாப்புச் சுவர் கட்டுதல் | 25.00 |
| 5 | தஞ்சாவூர் | கோட்டையன்காடு–உக்கடை– கொள்ளுக்காடு சாலை (11/0 – 13/6 கி.மீ.) மேம்பாடு | 25.00 |
| 6 | நாகப்பட்டினம் | பெருமலை– தில்லையாடி– திருக்கடையூர் சாலை (3/4 – 6/0 கி.மீ.) மேம்பாடு | 28.00 |
| | | சிக்கல் அருள்மிகு. சிங்காரவேலர் கோவில், கிழக்கு ரத வீதியில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 21.57 |
| 7 | கடலூர் | சிதம்பரம்–பிச்சாவரம் சுற்றுலா சுற்றுச் சாலை (3/2 – 6/4 கி.மீ.) மேம்பாடு | 90.00 |

| | | | |
|---|---|---|---|
| 8 | காஞ்சிபுரம் | மாமல்லபுரம் பேருந்து நிலையம் மற்றும் பாட சாலை மேம்பாடு | 8.00 |
| | | திருக்கழுக்குன்றம்–மாமல்லபுரம் சாலை மேம்பாடு | 80.00 |
| 9 | விருதுநகர் | அருள்மிகு திருவண்ணாமலை கோவில் (தென் திருப்பதி) கிரிவலப் பாதை சாலை (3 கி.மீ.) மேம்பாடு | 160.00 |
| 10 | சிவகங்கை | பிரான்மலை–வார்பட்டு சாலை (0/0 – 3/0 கி.மீ.) மேம்பாடு | 65.00 |
| | | பிரான்மலை–வார்பட்டு சாலை (3/0 – 6/2 கி.மீ.) மேம்பாடு | 70.00 |
| | | மலைக் கொழுந்தீஸ்வரர் கோவில் சாலை (0/0 – 3/0 கி.மீ.) மேம்பாடு | 23.00 |
| | | கண்டதேவி சாலை (0/0 – 0/850 கி.மீ.) மற்றும் தேவகோட்டை–புதுார் சாலை மேம்பாடு | 60.00 |
| | | **கூடுதல்** | **992.57** |

## மத்திய அரசு நிதி உதவித் திட்டங்கள்

தமிழ்நாட்டில் உள்ள முக்கிய சுற்றுலாத் தலங்களின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ‘மத்திய அரசு நிதி உதவித் திட்டத்தின்’ மூலம் இந்திய அரசின் சுற்றுலா அமைச்சகம் நிதி உதவி அளித்து வருகிறது.

## சுற்றுலா பெருந்திட்டங்கள்

முக்கியமான சுற்றுலாத் தலங்களுக்கு லட்சக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர். சுற்றுலா பருவ காலங்கள் மற்றும் சுப தினங்களில் சுற்றுலாத் தலங்களின் கொள்ளளவை விட அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். அவர்களின் தேவைகளை நிறைவேற்ற ஒருங்கிணைந்த கட்டமைப்பு வசதிகளை அளிப்பது மிகவும் அவசியமாகும். மத்திய அரசின் உதவியுடன் சுற்றுலா பெருந்திட்டத்தின் கீழ், முக்கிய சுற்றுலாத் தலங்களில் கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்படுகின்றன. தமிழ்நாட்டில் நான்கு இடங்களில் மேற்கண்ட சுற்றுலா பெருந்திட்டம்

செயல்படுத்தப்படுகிறது. அவற்றின் விவரம் பின்வருமாறு:—

| வ. எண். | திட்டத்தின் விவரம் | தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1. | மதுரை மேம்பாடு | 12.55 |
| 2. | இராமேசுவரம் மேம்பாடு | 10.00 |
| 3. | கன்னியாகுமரி மேம்பாடு | 13.76 |
| 4. | தஞ்சாவூர் அரண்மனை மேம்பாடு | 14.75 |

**சுற்றுலாத் தல மேம்பாட்டிற்கு 2011–2012 ஆம் ஆண்டில் ஒப்பளிக்கப்பட்ட மத்திய அரசு நிதி உதவித் திட்டங்கள்**

| வ. எண். | திட்டத்தின் விவரம் | ஒப்பளிக்கப் பட்ட தொகை (ரூ. லட்சத்தில்) | இதுவரை விடுவிக்கப் பட்ட தொகை (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | சேலம் மாவட்டம் ஏற்காட்டில் உள்ள தாவரவியல் பூங்கா மேம்பாட்டுப் பணிகள் | 365.00 | 292.00 |

| | | | |
|---|---|---|---|
| 2 | தேனி மாவட்டம் வைகை அணை பகுதியில் மேம்பாட்டுப் பணிகள் | 459.39 | 367.51 |
| 3 | நாமக்கல் மாவட்டம் ஜேடர்பாளையத்தில் பூங்கா மேம்பாட்டுப் பணிகள் | 456.00 | 364.80 |
| 4 | திருச்சிராப்பள்ளி மாவட்டம் திருவானைக்காவலில் மேம்பாட்டுப் பணிகள் | 358.97 | 287.17 |
| 5 | தஞ்சாவூர் மாவட்டம் கல்லணையில் மேம்பாட்டுப் பணிகள் | 408.00 | 326.40 |
| | **மொத்தம்** | **2047.36** | **1637.88** |

## ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடன் சுற்றுலா உள்கட்டமைப்பு மேம்பாட்டு முதலீட்டு திட்டம் (IDIPT)

தமிழ்நாட்டிற்கான சுற்றுலா உள்கட்டமைப்பு மேம்பாட்டு முதலீட்டு திட்டம், ஆசிய வளர்ச்சி வங்கியால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் ‘பல்லடுக்கு நிதி வசதி’ (Multi-Tranche Financing Facility) முறைப்படி

ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. சுற்றுலா அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதன் வாயிலாக, விரிவான பொருளாதார மேம்பாடு, உள்ளூர் மக்களுக்கு வாழ்வாதார வாய்ப்புகள் அளித்தல் ஆகியவை இந்த முதலீட்டுத் திட்டத்தின் இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த முதலீட்டுத் திட்டத்தின் கீழ் பின்வரும் ஐந்து செயல் திட்டங்கள் நிறைவேற்றப்படும்:—

(1) இயற்கை மற்றும் பண்பாட்டு வளங்களின் விரிவான தர மேம்பாடு
(2) நகர உள்கட்டமைப்பு மற்றும் சேவை மேம்பாடு
(3) போக்குவரத்து தொடர்பு மேம்பாடு மற்றும் வழிகாட்டி பலகைகள்
(4) சமூகம் சார்ந்த நடவடிக்கைகள்
(5) திறன் மேம்பாடு, சமூக பங்கேற்பு மற்றும் திட்ட மேலாண்மை

தமிழ்நாட்டில் சுற்றுலாத்துறை, சுற்றுலா திட்டங்களை நிறைவேற்றும் முகமைகளின் திறனை விரிவாக்கும் விதமாக தொழில்நுட்ப உதவி திட்டத்தை ஆசிய வளர்ச்சி வங்கி வகுத்துள்ளது. இத்திட்டத்தின் மூலம், தமிழ்நாட்டின் சுற்றுலாத் துறை வலுவூட்டப்படும். இதன் காரணமாக தமிழக சுற்றுலாத் தலங்களுக்கு

சுற்றுலாப் பயணிகளின் வருகை, அவர்கள் தங்கும் காலஅளவு, சுற்றுலாப் பயணிகள் செலவழிக்கும் தொகை ஆகியவை அதிகரிக்கும். மேற்கண்ட வளர்ச்சியால் கூடுதல் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும். ஏழை மக்கள் உள்ளிட்ட அனைத்து உள்ளூர் மக்களின் பொருளாதார மேம்பாடும் மற்றும் வாழ்க்கை தரமும் உயரும்.

ஆசிய வளர்ச்சி வங்கி உதவித் திட்டத்தின் மொத்த ஒதுக்கீடு ஐந்து ஆண்டுகளில் 100 மில்லியன் அமெரிக்க டாலர்கள் (ரூ.500 கோடி) ஆகும். இத்திட்டத்தின் படி, ஆசிய வளர்ச்சி வங்கியின் கடன் உதவியாக 70 சதவிகிதமும் (ரூ.350 கோடி), எஞ்சியுள்ள 30 சதவிகிதம் (ரூ.150 கோடி) மாநில அரசின் நிதி உதவியாகவும் உள்ளது.

இத்திட்டத்தின்படி, சுற்றுலா உள்கட்டமைப்பு வசதிகளை வலுவூட்ட பின்வரும் இரண்டு சுற்றுலா சுற்றுகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன:—

**1) கிழக்கு கடற்கரைச் சாலை சுற்றுலா சுற்று (ஆன்மீக மற்றும் பாரம்பரிய சுற்று)**

இது காஞ்சிபுரம், கடலூார், விழுப்புரம், திருவண்ணாமலை, நாகப்பட்டினம், திருவாரூர்,

தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களை உள்ளடக்கியதாகும்.

**2) தென்னக சுற்றுலாச் சுற்று (ஆன்மீக மற்றும் சுற்றுச் சூழல் சுற்று)**

இது மதுரை, தேனி, திண்டுக்கல், இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்கள் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளைஉள்ளடக்கியதாகும்.

இத்திட்டத்தின்கீழ் முதலில் கிழக்கு கடற்கரை சாலை சுற்றுலா சுற்றும், அதனைத் தொடர்ந்து தென்னக சுற்றுலா சுற்றும் மேற்கொள்ளப்படும். கிழக்கு கடற்கரை சாலை சுற்றுலா சுற்றினை செயற்படுத்த, ஆசிய வளர்ச்சி வங்கியின் குழு மூலம் முதற்கட்டமாக ஒன்பது துணை திட்டங்கள் கண்டறியப்பட்டு, அவற்றுக்கான துணை மதிப்பீட்டு அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஆசிய வளர்ச்சி வங்கி உதவித் திட்டத்தினை விரைவாக செயற்படுத்த மாண்புமிகு சுற்றுலா அமைச்சர் தலைமையில் ‘மாநில அளவிலான வழிப்படுத்தும்

குழுவும்’, தலைமைச் செயலாளர் தலைமையில் ‘அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவும்’ அமைத்து, மாநில அரசாணை வெளியிட்டுள்ளது. இத்திட்டத்திற்கான கடன் ஒப்பந்தத்தில், ஆசிய வளர்ச்சி வங்கியும் மாநில அரசும் 2–4–2012 அன்று, புது தில்லியில் கையெழுத்திட்டுள்ளன.

**சுற்றுலா வகைகள்**

அனைத்து வகை சுற்றுலாப் பயணிகளையும் கவரும் வகையில், பலதரப்பட்ட சுற்றுலாத் தலங்களை தமிழ்நாடு தன்னகத்தே கொண்டுள்ளது. அனுபவம் வாய்ந்த சுற்றுலாப் பயணிகளால் விரும்பி தேர்வு செய்யக்கூடிய பல சுற்றுலாத் தலங்கள் தமிழகத்தில் உள்ளன. பின்வரும் முக்கிய சுற்றுலா வகைகளின் மீது சிறப்புக் கவனம் அளிக்கப்பட்டு வருகிறது.

**அ) ஆன்மிக சுற்றுலா**

ஆன்மிகத்தின் அடையாளம் வழிபாட்டுத் தலங்கள் ஆகும். முக்கியமாக தேசிய ஒருமைப்பாடு மற்றும் சமூக நல்லிணக்கத்திற்கு அடையாளமாகவும் இவை உள்ளன.

இவை ஆண்டு முழுவதும் தரிசிக்கக் கூடிய தலங்களாகும். திருச்சி, மதுரை, சிதம்பரம், இராமேசுவரம், திருவண்ணாமலை, தஞ்சாவூர், கும்பகோணம், நாகப்பட்டினம் மற்றும் முருகப் பெருமானின் ஆறுபடை வீடுகள் உள்ள கோவில்கள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் கவருகின்றன. பக்தர்கள் பெரும்பாலும் குழுவாகவே வருகின்றனர். சுற்றுலாவை சிறப்பாக சந்தைப்படுத்தும் இடங்களாக இந்த வழிபாட்டுத் தலங்கள் திகழ்கின்றன. வழிபாட்டுத் தலங்களில் செய்யப்படும் சிறப்பான உள்கட்டமைப்பு வசதிகள் அதிக அளவில் பக்தர்களையும், சுற்றுலாப் பயணிகளையும் கவர்ந்து, நீண்ட கால பயன்களை கண்டிப்பாக அளிக்கும். எனவே, ஆன்மிகத் தலங்களில் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கு சுற்றுலாத் துறை முன்னுரிமை அளித்து வருகிறது.

### ஆ) பாரம்பரிய சுற்றுலா

தமிழ்நாட்டின் பாரம்பரியம் மிக்க பண்பாடு மிகப்பெரிய சுற்றுலா அற்புதமாகும். தமிழ்நாட்டில் 49 தலங்கள் ஏற்கெனவே பாரம்பரிய தலங்களாக மாநில அரசால் அறிவிக்கப்பட்டுள்ளன. பிரசித்தி பெற்ற கலை,

பண்பாடு, கட்டிடக் கலை, பண்டைய கைவினைப் பொருட்கள், சமையல் கலை ஆகியவை காரணமாக சுற்றுலாப் பயணிகள், குறிப்பாக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாட்டின் மீது தனி விருப்பம் கொண்டுள்ளனர். தமிழக விழாக்கள், குறிப்பாக டிசம்பர் முதல் பிப்ரவரி மாதங்களில் நடைபெறும் இசை, நாட்டிய விழாக்கள் மிக அதிக அளவில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவர்கின்றன. தமிழகத்தின் பாரம்பரிய உணவுகளான செட்டிநாடு, மதுரை, திருநெல்வேலி, கொங்கு வட்டார உணவு வகைகள் அறுசுவையுடன் விதவிதமான வகையில் தயாரிக்கப்படுவதால், சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க உதவுகிறது. தமிழ்நாடு சுற்றுலாத் துறை சார்பில் இந்திய நாட்டிய விழா, சித்திரை விழா, கோடை விழாக்கள் மற்றும் பண்பாட்டு விழாக்கள் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளையும், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளையும் ஈர்க்கும் வகையில் நடத்தப்படுகின்றன. பாரம்பரிய சுற்றுலா மையங்களில், கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த பின்வரும் திட்டங்களை செயல்படுத்த அரசு ஆணை வெளியிட்டுள்ளது:–

## 2011–2012 ஆம் ஆண்டில் ஒப்பளிக்கப்பட்ட திட்டங்கள்

| வ. எண். | திட்டத்தின் விவரம் | ஒப்பளிக்கப்பட்ட தொகை (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | மாமல்லபுரத்தில் சுற்றுலா வரவேற்பு மையம் கட்டுதல் | 30.00 |
| 2 | தூத்துக்குடியிலுள்ள பழங்காலத் துறைமுகமான கொற்கை மேம்பாடு | 35.00 |
| 3 | காரைக்குடியில் சுற்றுலா வரவேற்பு மையம் கட்டுதல் | 35.00 |

### இ) சுற்றுச் சூழல் சுற்றுலா

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் தனியாக ஒரு **'சுற்றுச் சூழல் சுற்றுலா'** பிரிவு இயங்குகிறது. இப்பிரிவின் மூலம் மலை வாழிடங்கள், அருவிகள், வனங்கள், பறவை சரணாலயங்கள், வனவிலங்கு சரணாலயங்கள், தேசிய பூங்காக்கள் போன்ற இடங்களில் சுற்றுச் சூழல் சுற்றுலாவை மேம்படுத்திடும் வகையிலும், சுற்றுலாப் பயணிகள் பயன்பெறவும் ஒருங்கிணைந்த சுற்றுலா வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழகத்தில் சுற்றுச் சூழல் சுற்றுலாவை தன்னிறைவு அடைவதற்காக சுற்றுச் சூழலுக்கும், வன உயிரினங்கள் வாழ்விற்கும் பாதிப்பில்லாத வகையில்

பல்வேறு தொகுப்பு சுற்றுலாக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. சுற்றுச் சூழல் சுற்றுலாவை மேம்படுத்த பின்வரும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன:—

## 2011–2012 ஆம் ஆண்டில் ஒப்பளிக்கப்பட்ட திட்டங்கள்

| வ. எண். | திட்டத்தின் பெயர் | ஒப்பளிக்கப்பட்ட தொகை (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | சேலம் மாவட்டம் ஏற்காட்டில் தாவரவியல் பூங்கா மேம்பாடு | 365.00 |
| 2 | நாமக்கல் மாவட்டம் கொல்லி மலை மேம்பாடு | 274.33 |
| 3 | சேலம் மாவட்டம் ஏற்காடு ஏரியை தூர்வாரி அழகுபடுத்துதல் | 87.00 |
| 4 | முத்துப்பேட்டை கடற்கரைக் காயல் பகுதியில் உள்கட்டமைப்பு வசதிகள் | 58.88 |
| 5 | கொடைக்கானலில் குறிஞ்சி மலர் பூங்கா அமைத்தல் | 15.20 |
| 6 | உதகமண்டலத்தில் சுற்றுலா வரவேற்பு மையம் | 20.00 |

**ஈ) ஊரகச் சுற்றுலா**

இந்திய அரசு மற்றும் ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டத்தின் உதவியுடன், **‘ஊரகச் சுற்றுலா’** மேம்படுத்தப்பட்டு வருகிறது. இந்திய அரசு நிதியின் மூலம் கட்டுமானப் (உள்கட்டமைப்பு) பணிகளும், ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்ட நிதியின் மூலம் மென்பொருள் (திறன் வளர்ப்பு பயிற்சி) பணிகளும் அரசு சாரா அமைப்புகள் மூலம் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. செட்டிநாடு (சிவகங்கை மாவட்டம்), தடியன்குடிசை (திண்டுக்கல் மாவட்டம்), குரங்கனி (தேனி மாவட்டம்), கழுகுமலை (தூத்துக்குடி மாவட்டம்), தீர்த்தமலை (தர்மபுரி மாவட்டம்), திருக்குறுங்குடி (திருநெல்வேலி மாவட்டம்) உள்ளிட்ட 18 ஊரகச் சுற்றுலா திட்டங்களுக்காக இதுவரை மொத்தம் ரூ.6.21 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நமது கிராம வாழ்க்கை முறையைப் புரிந்து கொள்ள அதிக ஆர்வம் காட்டுகின்றனர். நகரத்தில் வாழும் குழந்தைகள் கிராம வாழ்க்கை முறையினை அறிந்திட ஊரகச் சுற்றுலா உதவுகிறது. கலை, கைவினை, பண்பாடு ஆகியவற்றில் சிறந்து விளங்கும் 5 முதல் 7 கிராமங்கள் அடங்கிய ஊரகச் சுற்றுலா தொகுப்புகள் மாவட்டந்தோறும் கண்டறியப்பட்டுள்ளன. சிவகங்கை மாவட்டத்திலுள்ள

செட்டிநாடு பகுதியில் ஊரகச் சுற்றுலாத் தொகுப்பு திட்டத்தினை **2012–2013–ல்** செயல்படுத்த, இந்திய அரசின் சுற்றுலா அமைச்சகம் முன்னுரிமைப் படுத்தியுள்ளது.

**உ) மருத்துவச் சுற்றுலா**

மருத்துவச் சுற்றுலா மையங்களில் இந்தியாவிலேயே முதலிடத்தில் தமிழ்நாடு உள்ளது. மருத்துவ வல்லுநர்கள், அனைத்து வசதிகளும் கொண்ட தனியார் மருத்துவமனைகள், குறைவான காத்திருப்பு நேரம், நியாயமான கட்டணத்தில் சிகிச்சை ஆகியவை தமிழகத்தின் மருத்துவச் சுற்றுலா மேம்பாட்டிற்கு உதவும் மிகப்பெரிய சாதக அம்சங்களாகும்.

தமிழ்நாட்டின் முன்னணி மருத்துவமனைகளுடன் இணைந்து மருத்துவச் சுற்றுலா மேம்படுத்தப்படுகிறது. இதேபோன்று, யோகா, தியானம், ஆயுர்வேதம், மருத்துவ ஓய்வில்லம் மற்றும் இயற்கை மருத்துவம் ஆகியவற்றுடன் கூடிய நலவாழ்வு சுற்றுலாவும் வளர்ந்து வருகின்றது. இத்துறையில் ஈடுபட்டுள்ள சிறந்த நிறுவனங்களுடன் அரசு கூட்டாக இணைந்து செயல்படுகின்றது. மருத்துவச் சுற்றுலாவையும் மற்றும் நலவாழ்வு சுற்றுலாவையும்

பிரபலப்படுத்தும் பொருட்டு முனைப்புக் குழு ஒன்று அமைத்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

**ஊ) சாகசச் சுற்றுலா**

சாகசங்களை விரும்பும் இளைஞர்களை கவரும் விதத்தில் சாகசச் சுற்றுலா மேம்படுத்தப்படுகிறது. நீலகிரி, கொடைக்கானல், ஏற்காடு மற்றும் ஏலகிரி ஆகிய இடங்களில் மலையேற்றம் செய்யக்கூடிய பாதைகள் கண்டறியப்பட்டுள்ளன. பாராகிளைடிங் சாகசம் ஏலகிரி மலைப்பகுதியில் கோடை காலத்தில் நடத்தப்படுகின்றது. அதிவிரைவு படகுகள், வாட்டர் ஸ்கூட்டர்கள், வாழைப்பழ வடிவ படகுகள் முதலியார்குப்பம் படகுக் குழாமில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. ஏலகிரி, கொல்லிமலை, மதுரை நாகனாகுளம் ஆகிய பகுதிகளில் புதிதாக படகு சவாரி தொடங்கப்பட்டுள்ளது. கிழக்கு கடற்கரையோர சுற்றுலாத் தலங்களான கோவளம், முதலியார்குப்பம், பூம்புகார், தரங்கம்பாடி ஆகிய பகுதிகளில் நீர் சாகச விளையாட்டுக்களான வாட்டர் ஸ்கீயிங், விண்ட் சர்ஃபிங், யாட்சிங், அதிவிரைவு படகுகளில் பயணம் ஆகியவற்றை தொடங்க சுற்றுலாத் துறை நடவடிக்கை எடுத்து வருகின்றது.

### எ) பொறுப்புணர்வு சுற்றுலா

பிரபலமான சுற்றுலாத் தலங்களின் கொள்ளளவு, அதன் உச்சத்தை எட்டி விட்டது. எனவே, அதிகப் பிரபலமாகாத சுற்றுலாத் தலங்கள் பிரபலப்படுத்தப்படுகின்றன. ஓரிடத்தில் சுற்றுலாவை தன்னிறைவு அடையச் செய்வதற்கு, சுற்றுலாவிற்கு சாதகமான நீடித்த வளர்ச்சியை உறுதி செய்திட, அவ்விடத்தின் உள்ளூர் சமுதாயம், கழிவு மேலாண்மை, உயிரின வாழ்க்கை மற்றும் சுற்றுச் சூழல் பாதிக்கப்படாமல் இருத்தல் ஆகியவற்றை கவனத்தில் கொள்ள வேண்டும். சுற்றுச் சூழல் சுற்றுலாத் தலங்களின் கொள்ளளவு குறித்து ஆய்வு செய்யப்பட்டு, அதற்கேற்ற வகையில் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிக்கப்படும். இதன் பயனாக உதகமண்டலம், கொடைக்கானல் போன்ற முக்கிய சுற்றுலாத் தலங்களில் பருவ காலங்களின் போது ஒரே சமயத்தில் குவியும் சுற்றுலாப் பயணிகள் கட்டுப்படுத்தப்பட்டு, ஆண்டு முழுவதும் பரவலாக வருகை தரும் வகையில் நெருக்கடி தளர்த்தப்படும். சீசன் அல்லாத சாதாரண காலகட்டத்தில் மலை வாழிடங்களில் வர்த்தக நிறுவனங்களின் கூட்டங்கள், பயிற்சிகள், நலவாழ்வு நிகழ்ச்சிகள் நடத்த வசதிகள் செய்யப்படும்.

தமிழ்நாட்டில் 32 அதிகப் பிரபலமாகாத சுற்றுலாத் தலங்கள் கண்டறியப்பட்டுள்ளன. அங்கு அரசு மற்றும் தனியார் துறை மூலமாக அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்க சிறப்புக் கவனம் அளிக்கப்பட்டு வருகிறது. இதனால் முக்கிய சுற்றுலாத் தலங்களில் சுற்றுலா பருவ காலங்களில் சுற்றுலாப் பயணிகளின் நெருக்கடியால் உருவாகும் சிரமங்கள் அகற்றப்படும். பிற மாவட்டங்களில் உள்ள சுற்றுலா தலங்களும் சுற்றுலா வரைபடத்தில் அதிக அளவில் இடம் பெறும். இவ்வாறு ஏலகிரி, வால்பாறை, கொல்லி மலை, பழவேற்காடு, தரங்கம்பாடி, பிச்சாவரம், திருக்கடையூர், ஒகேனக்கல், மேகமலை, கொடிவேரி அணை, வைகை அணை, சிக்கல் மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் போன்ற பகுதிகள் பிரபலமான சுற்றுலாத் தலமாக வளர்ந்துள்ளன.

## ஏ) பண்பாட்டுச் சுற்றுலா

### கண்காட்சிகள் மற்றும் விழாக்கள்

இந்தியாவின் ‘பண்பாட்டு மையம்’—ஆக தமிழ்நாடும், ‘பண்பாட்டுத் தலைநகர்’— ஆக சென்னையும் உருவெடுத்துள்ளன. தமிழ்நாட்டின் பண்பாட்டு பாரம்பரியம் மற்றும் திருவிழாக்களின் மீது வெளிநாட்டு

சுற்றுலாப் பயணிகள் தீவிர ஆர்வம் காட்டுகின்றனர். கலை மற்றும் கைவினைப் பொருட்கள், பட்டு மற்றும் வாசனை திரவியங்களும் சுற்றுலாப் பயணிகளால் விரும்பப்படுகின்றன. பண்டை கால வியாபாரப் பெருவழிகளான பட்டுப் பாதை மற்றும் வாசனை திரவியப் பாதையுடன் தமிழ்நாட்டிற்கு வரலாற்றுத் தொடர்பு உள்ளது.

மாமல்லபுரத்தில் இந்திய நாட்டிய விழா, டிசம்பர் முதல் சனவரி வரை ஒரு மாத காலம் நடத்தப்படுகிறது. இவ்விழா இந்தியாவின் அனைத்து மாநிலங்களின் முன்னணி பாரம்பரிய மற்றும் நாட்டுப்புறக்கலை வடிவங்கள் ஒரே மேடையில் தோன்றும் விதமாக நடத்தப்படுகிறது. இந்த விழா வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை பெரிய அளவில் கவருவதுடன், அவர்கள் இங்கு அதிக காலம் தங்குகின்றனர். இதேபோல் சென்னை, சிதம்பரம், திருவையாறு மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் நடத்தப்படும் இசை மற்றும் நாட்டிய விழாக்கள் அதிக அளவில் சுற்றுலாப் பயணிகளைக் கவருகின்றன.

சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க, கண்காட்சிகள் மற்றும் விழாக்கள் அதிக அளவில் நடத்தப்படுகின்றன. மலை வாழிடங்களான உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு, ஏலகிரி, கொல்லிமலை, கல்வராயன்மலை, ஜவ்வாதுமலை மற்றும் மேகமலை ஆகிய இடங்களில் கோடை விழாக்கள் நடத்தப்படுகின்றன. மேலும், சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திட, மதுரையில் சித்திரை விழா, ஸ்ரீரங்கத்தில் வைகுண்ட ஏகாதசி விழா, கன்னியாகுமரியில் தேசிய சுற்றுலா விழா, நீலகிரியில் தேயிலை மற்றும் சுற்றுலா விழா ஆகியவை சுற்றுலாத் துறையால் நடத்தப்படுகின்றன.

## 2011–2012–ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட விழாக்கள்

### அ) மாநில அரசு மற்றும் மத்திய அரசு நிதி உதவியுடன் நடத்தப்பட்ட விழாக்கள்

- இந்திய நாட்டிய விழா, மாமல்லபுரம்
- தேசிய சுற்றுலா மற்றும் பண்பாட்டு விழா, கன்னியாகுமரி

**ஆ) மாநில அரசு நிதியுதவியுடன் நடத்தப்படும் விழாக்கள்**

வருடந்தோறும் நடத்தப்படும் பின்வரும் விழாக்கள் தமிழ்நாட்டின் பண்பாட்டு பாரம்பரியத்தை வெளிப்படுத்துகின்றன.

- பொங்கல் சுற்றுலா விழா
- தேயிலை சுற்றுலா விழா, உதகமண்டலம்
- சித்திரை முழு நிலவு விழா, பூம்புகார்
- கட்டபொம்மன் விழா, பாஞ்சாலங்குறிச்சி
- சலங்கை நாதம் மற்றும் பாகவத மேளா, தஞ்சாவூர்
- மாங்கனி விழா, கிருஷ்ணகிரி
- அனைத்து மலைவாழிடங்களில் கோடை விழா
- கந்தூரி விழா, நாகூர்
- சாரல் திருவிழா, குற்றாலம்
- திற்பரப்பு விழா, கன்னியாகுமரி
- ஆடிப்பெருக்கு விழா, ஒகேனக்கல்
- வேளாங்கன்னி விழா, வேளாங்கன்னி

- அனைத்து சுற்றுலா தலங்களிலும் உலக சுற்றுலா தினவிழா
- தசரா விழா, பாளையங்கோட்டை (கிருஷ்ணாபுரம்)
- சதய விழா, தஞ்சாவூர்
- தீபத் திருவிழா, திருவண்ணாமலை
- வைகுண்ட ஏகாதசி விழா, ஸ்ரீரங்கம்
- இந்திய நாட்டிய விழா, தஞ்சாவூர்
- கிராமிய நாட்டிய விழா, கங்கைகொண்ட சோழபுரம்

## ஜல்லிக் கட்டு

தென் மாவட்டங்களில் நடத்தப்படும் 'ஜல்லிக் கட்டு' அதிக அளவில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கிறது. சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய, ஜல்லிக் கட்டு நடைபெறும் இடங்களில் உள்கட்டமைப்பு வசதிகளை வலுவூட்ட சுற்றுலாத்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

## மனிதவள மேம்பாடு

### அ) சுற்றுலா வழிகாட்டிப் பயிற்சித் திட்டம்

சுற்றுலா மேம்பாட்டில் சுற்றுலா வழிகாட்டிகள் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். சுற்றுலாப் பயணிகளிடம் நமது நாட்டின் நன்மதிப்பை போற்றும் விதமாக, சரியான தகவல்களை அளித்தல், பாதுகாப்பு மற்றும் நலம் பேணுதல், மகிழ்வுடன் தங்குவதற்கு ஏற்ற வசதியான இடத்தை உறுதி செய்தல் ஆகியவற்றிற்கு சுற்றுலா வழிகாட்டிகளே பொறுப்பானவர்கள்.

தமிழ்நாடு சுற்றுலாத்துறை, சென்னையிலுள்ள அண்ணா மேலாண்மைப் பயிற்சி நிறுவனத்தின் கூட்டு முயற்சியுடன் வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் மற்றும் ஓய்வு பெற்ற அரசு அலுவலர்களுக்கு சுற்றுலா வழிகாட்டி பயிற்சித் திட்டத்தை நடத்தி வருகிறது. இதுவரை பயிற்சி பெற்ற 264 சுற்றுலா வழிகாட்டிகளுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. 2012–2013–ஆம் ஆண்டில், 482 நபர்களுக்கு சுற்றுலா வழிகாட்டிப் பயிற்சி அளிக்கப்படும்.

## ஆ) திறன் வளர்ப்பு பயிற்சி

ஊரக சுற்றுலாத் தலங்களில் உள்ள உள்ளூர் மக்கள், தங்கும் விடுதிகளிலுள்ள வரவேற்பு பணியாளர்கள், வாடகை சீருந்து மற்றும் ஆட்டோ ஓட்டுநர்கள், விமான நிலைய / இரயில் நிலையங்களில் சுற்றுலாப் பயணிகளை எதிர்கொள்ளும் பணியாளர்கள் ஆகியோருக்கு திறன் வளர்ப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

## இ) ஆற்றல் மேம்பாட்டுப் பயிற்சி (ஹுனார் சே ரோஜ்கார் தக்)

இந்திய அரசு சுற்றுலா அமைச்சகத்தின் ஆற்றல் மேம்பாட்டு பயிற்சித் திட்டத்தின் மூலம், உணவாக்கக் கலை தொழில்நுட்ப நிறுவனங்களில் விருந்தோம்பல் சம்பந்தமாக ஆற்றல் மேம்பாட்டு பயிற்சி நடத்தப்படுகிறது. சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளியில் உள்ள உணவாக்கக் கலை தொழில்நுட்ப நிறுவனங்கள் மூலம் இதுவரை **3337** நபர்களுக்கு உணவு தயாரித்தல், சமையற் கலை, அறைகள் பராமரிப்பு, அறைகளுக்கான சேவை போன்றவற்றில் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

## சுற்றுலா பாதுகாப்பு அமைப்பு

சுற்றுலாத் துறையில் ‘சுற்றுலா பாதுகாப்பு அமைப்பு’ ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்த அமைப்பில் சென்னையில் ஒரு ‘தலைமை சுற்றுலா பாதுகாவலரும்’, அவரின் கட்டுப்பாட்டில் 5 முக்கிய சுற்றுலாத் தலங்களான மாமல்லபுரம், இராமேசுவரம், கன்னியாகுமரி, கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் ஆகிய இடங்களில் ‘நிலைய சுற்றுலா பாதுகாவலர்’களும் பணியாற்றுகின்றனர். ஒவ்வொரு சுற்றுலா மையமும் தலா 5 சுற்றுலா பாதுகாவலர்களைக் கொண்டுள்ளது. தற்போதுள்ள 30 பாதுகாவலர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்படும். மேலும், ஒவ்வொரு மையத்திற்கும் பெண் சுற்றுலா பாதுகாவலர்களும் நியமிக்கப்படுவார்கள். சுற்றுலா பாதுகாவலர்களுக்கு 5 மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்திய அரசின் சுற்றுலா அமைச்சகம், இந்த சுற்றுலாப் பாதுகாப்பு அமைப்பு உருவாக்கப்பட்டதை ஊக்கப்படுத்தியதுடன், அதில் தமிழ்நாடு முன்னோடியாக திகழ்வதையும் பாராட்டியுள்ளது. சுற்றுலாக் காவலர் அமைப்பின் திறமையான செயல்பாட்டிற்கு, சுற்றுலாப் பயணிகள் மற்றும் உள்ளூர் மக்களிடையே

நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளதோடு, இது குறித்து பத்திரிக்கை ஊடகங்களிலும் செய்திகள் வெளிவந்துள்ளன.

**விளம்பரம் மற்றும் சந்தைப்படுத்துதல்**

தமிழ்நாட்டில் உள்ள அளவற்ற சுற்றுலா வளங்களை உலக அளவில் பிரபலப் படுத்தப்படுவதன் மூலம், சுற்றுலாப் பயணிகளின் வருகை பன்மடங்கு அதிகரிக்கும். நமது சுற்றுலா தலங்களை பிரபலப்படுத்திட, அனைவரின் கவனத்தை ஈர்க்கும் விதத்தில் நவீன விளம்பர யுக்தி கையாளப்பட வேண்டும். அதன்படி ‘பரிச்சய சுற்றுலா’வை, பயணக்கட்டுரை எழுத்தாளர்கள், சுற்றுலா பயண ஏற்பாட்டாளர்கள், வாடகை விமானப் பயண ஏற்பாட்டாளர்கள், உல்லாச கப்பல் சுற்றுலா ஏற்பாட்டாளர்கள் ஆகியோர்களுக்கு நடத்தி, அவர்களை முழுமையான அளவில் ஈடுபடுத்தவேண்டும்.

சிங்கபூர், மலேசியா, தென்ஆப்பிரிக்கா, மொரிசியஸ், இங்கிலாந்து, அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்ஸ், பெல்ஜியம், இத்தாலி, ஸ்பெயின், இஸ்ரேல், ரஷ்யா, நெதர்லாந்து, ஸ்காண்டிநேவிய நாடுகள் (நார்வே–ஸ்வீடன்), ஆஸ்திரேலியா மற்றும் நியுசிலாந்து

ஆகிய நாடுகளிலிருந்து அதிகளவில் சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர். இந்த நாடுகளில் நமது சுற்றுலாவை சந்தைப்படுத்தும் முகாம்களை தீவிரமாக மேற்கொண்டால், தமிழ்நாட்டின் சுற்றுலா வளங்கள் மிகப்பெரிய அளவில் பிரபலமடையும்.

பன்னாட்டு சுற்றுலா சந்தைகள் நடைபெறும்போது, சுற்றுலாப் பயணம் மற்றும் விருந்தோம்பல் துறையில் உள்ள முக்கிய தரப்பினர் அனைவரும் ஒரே இடத்தில் கூடுகின்றனர். இது போன்ற சந்தைகளில் சுற்றுலாத் துறையின் மூலம் நமது சுற்றுலாத் தலங்கள் பிரபலப் படுத்தப்படுகின்றன. இந்தியாவில் அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. முதல் இடத்தைப் பெறுவதற்கு சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். மேலும், நவம்பர் 2012ல் இலண்டனில் நடைபெறவுள்ள 'சர்வதேச பயணச் சந்தை' (WTM) மற்றும் மார்ச் 2013–ல் ஜெர்மனியின் பெர்லினில் நடைபெறவுள்ள 'சர்வதேச சுற்றுலாச் சந்தை' (ITB) ஆகிய முக்கியமான பன்னாட்டு சுற்றுலா சந்தைகளில் தமிழகத்தின் சுற்றுலா வளங்கள் விளம்பரப்படுத்தப்படும்.

நெதர்லாந்து, ஸ்விட்சர்லாந்து மற்றும் பிரான்ஸ் போன்ற நாடுகளில் இந்திய சுற்றுலாத் துறையுடன் இணைந்து விளம்பர முகாம்கள் மற்றும் சந்தைப்படுத்தும் சந்திப்புகள் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டு சுற்றுலா வளங்களை வெளிப்படுத்த, அங்குள்ள அயல்நாட்டு சுற்றுலா ஏற்பாட்டாளர்கள் மற்றும் பயண எழுத்தாளர்களுக்கு 'பரிச்சயச் சுற்றுலாக்கள்' ஏற்பாடு செய்யப்படும்.

இந்திய சுற்றுலா அமைச்சகத்தின் **2010**–ஆம் ஆண்டிற்கான புள்ளி விவரப்படி, **11.16** கோடி உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளும், **28.05** இலட்சம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் தமிழ்நாட்டிற்கு வருகை தந்துள்ளனர். சுற்றுலாப் பயணிகள் வருகை **2011**–ஆம் ஆண்டில் மேலும் அதிகரித்துள்ளது. **2011**–ஆம் ஆண்டில் **13.68** கோடி உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளும், **33.08** இலட்சம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் தமிழகத்திற்கு வந்துள்ளனர். சுற்றுலாப் பயணிகள் வருகையினையும், அவர்களின் தங்கும் காலத்தையும் அதிகரிக்கவும் மாநில சுற்றுலாத் துறை தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. உள்நாட்டு சுற்றுலாவை மேம்படுத்த, குஜராத், மகாராஷ்டிரம், மேற்கு

வங்காளம், ராஜஸ்தான் மற்றும் உத்தரப் பிரதேசம் போன்ற பெரிய மாநிலங்களில் 2012–2013–ஆம் ஆண்டில் விளம்பர முகாம்கள் (Road Shows) நடத்தப்படும்.

## சுற்றுலா மேம்பாட்டிற்கான உத்திகள்

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 18–12–2011 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்புகள்

அரசு ஆணை (4டி) எண். 1, சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் (சு1) துறை, நாள் 23.9.2011–ன் வாயிலாக பின்வரும் 7 உத்திகளின் மூலம் சுற்றுலாவை மேம்படுத்த ஆணை வெளியிடப்பட்டது:–

1. சுற்றுலா சிறப்புப் பூங்காக்களை உருவாக்குதல்
2. கிராமிய சுற்றுலாத் தொகுப்புகளை உருவாக்குதல்
3. முக்கிய சுற்றுலா தலங்கள் / சுற்றுலா சுற்றுக்கள் / நகரங்களில் ஒருங்கிணைந்த சுற்றுலா மேம்பாடு
4. திறன் வளர்ப்பு பயிற்சி
5. சாலையோர வசதி மையங்கள்
6. ‘சுத்தமான கழிவறை’ பிரச்சாரம்

## 7. ஹெலிகாப்டர் சுற்றுலா, உல்லாசக் கப்பல் சுற்றுலா மற்றும் கம்பி வழித்தடம் (ரோப் கார்) சுற்றுலா திட்டங்களை செயல்படுத்துதல்

| வ. எண். | திட்டத்தின் பெயர் | எடுத்த நடவடிக்கை விவரம் |
|---|---|---|
| 1 | சுற்றுலா சிறப்புப் பூங்காக்கள் உருவாக்குதல் | இத்திட்டத்திற்காக காஞ்சிபுரம் மாவட்டம் மாமல்லபுரம் அருகில் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இரண்டு பொருத்தமான இடங்கள் கண்டறியப்பட்டுள்ளன. அந்த இடங்களில் ‘பொதுத்துறை மற்றும் தனியார் பங்கேற்பு’ முறையில் சுற்றுலா சிறப்புப் பூங்காக்கள் அமைக்கப்பட உள்ளன. இதற்கான விரிவான மதிப்பீட்டு அறிக்கை தயாரிப்பதற்கும், இத் திட்டத்தை செயற்படுத்திட தனியார் பங்குதாரர்களை கண்டறியவும் மாநில அளவிலான ஆலோசகரை இந்திய சுற்றுலா அமைச்சகம் நியமிக்கும். |

| | | | |
|---|---|---|---|
| 2 | கிராமிய சுற்றுலா தொகுப்புகள் உருவாக்குதல் | கிராமிய சுற்றுலா தொகுப்புகளை உருவாக்க, தமிழ்நாட்டில் ஏழு மாவட்டங்கள் கண்டறியப்பட்டுள்ளன. | |
| | | சிவகங்கை | செட்டிநாடு பகுதி – காரைக்குடி, பிள்ளையார்பட்டி கானாடுகாத்தான், ஆத்தங்குடி (2012–2013ஆம் ஆண்டில் மத்திய அரசு நிதியுதவியின் கீழ் ரூ.11.00 கோடி செலவில் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.) |
| | | தஞ்சாவூர் | கும்பகோணம், சுவாமிமலை, தாராசுரம், பட்டீஸ்வரம், நாச்சியார் கோவில் பகுதி |

| | | | |
|---|---|---|---|
| | | திருநெல்வேலி | கல்லிடைக்குறிச்சி, அம்பாசமுத்திரம், பாபநாசம் முண்டந்துறை பகுதி |
| | | கன்னியாகுமரி | சுசீந்திரம், திற்பரப்பு, திருவட்டாறு, உதயகிரி, தேங்காய்பட்டினம் பகுதி |
| | | மதுரை | அழகர்கோவில், பழமுதிர்சோலை, மேலூார், நரசிங்கம்பட்டி பகுதிகள் |
| | | கோயம்புத்துார் | பொள்ளாச்சி, ஆனை மலை, ஆழியாறு பகுதி |
| | | நாமக்கல் | கொல்லி மலைப் பகுதி |

| | | |
|---|---|---|
| **3** | முக்கிய சுற்றுலா தலங்கள்/ சுற்றுலா சுற்றுக்கள்/ நகரங்களில் ஒருங்கிணைந்த மேம்பாட்டுப் பணிகள் | அ) ஆசிய வளர்ச்சி வங்கியின் கடன் உதவித் திட்டத்தின் மூலம் கிழக்குக் கடற்கரை சுற்றுலாச் சுற்று (ஆன்மீக மற்றும் புராதனச் சுற்று) மற்றும் தென்னக சுற்றுலாச் சுற்று (ஆன்மீக மற்றும் சுற்றுச் சூழல்) ஆகிய இரண்டு சுற்றுலாச் சுற்றுகள் மேம்படுத்தப்படும். இத் திட்டத்திற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.500 கோடி (ஆசிய வளர்ச்சி வங்கியின் கடன் 70 சதவிகிதம் + மாநில அரசு நிதி 30 சதவிகிதம்) ஆகும். இதற்கான கடன் ஒப்பந்தம் 2–4–2012ல் புது தில்லியில் கையெழுத்திடப் பட்டுள்ளது.<br>ஆ) திருச்சி–கும்பகோணம்–மயிலாடுதுறை –விருத்தாசலம்–திருச்சிராப்பள்ளி பெருந்திட்ட சுற்றுலாச் சுற்றுக்காக, மத்திய அரசு நிதி உதவித் திட்டத்தின் கீழ் 2012–2013 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.50 கோடி நிதி உதவி பெற்று, இந்த பெருந்திட்டத்தின் கீழ் வரும் சுற்றுலாத் தலங்கள் மேம்படுத்தப்படும். |

| | | |
|---|---|---|
| 4 | திறன் வளர்ப்பு பயிற்சி | **அ) சுற்றுலா வழிகாட்டி பயிற்சி திட்டம்**<br>சுற்றுலா மேம்பாட்டில் சுற்றுலா வழிகாட்டிகளின் பங்கு முக்கியமானதாகும். தமிழ்நாடு சுற்றுலாத் துறை, சென்னை அண்ணா மேலாண்மை பயிற்சி நிறுவனம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை ஆகியவற்றின் கூட்டு முயற்சியுடன் இதுவரை 264 நபர்களுக்கு வழிகாட்டி பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 2012–2013–ல் மற்றொரு பயிற்சித் திட்டமும் நடத்தப்படும்.<br>**ஆ) திறன் வளர்ப்பு பயிற்சி**<br>இளைஞர்களுக்கு உணவுக் கலை மற்றும் குளிர் பானங்கள் உற்பத்தி போன்ற திறன் வளர்ப்புப் பயிற்சிகளை, சென்னை தரமணியில் உள்ள உணவக மேலாண்மை, உணவாக்கத் தொழில் நுட்பவியல் மற்றும் ஊட்டச்சத்து பயிற்சி நிறுவனம் மற்றும் திருச்சி துவாக்குடியில் உள்ள உணவக மேலாண்மை நிறுவனம் போன்றவைகள் வழங்குகின்றன. பெரும்பான்மையான தனியார் நிறுவனங்களும் திறன் வளர்ப்பு |

| | | |
|---|---|---|
| | | பயிற்சியில் சான்றிதழ் படிப்பு வழங்குகின்றன. மேலும், மத்திய அரசு சுற்றுலா அமைச்சகம் வெளியிட்டுள்ள வழிகாட்டுதலின்படி, 28 வயது வரை உள்ளவர்களுக்கு, ஓட்டுநர் பயிற்சி பள்ளி மூலம் 2012–2013ல் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. பன்னிரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில், திறன் வளர்ப்பு பயிற்சியினை தொழில்நுட்ப பயிற்சி நிறுவனங்கள் (ஐடிஐ) மற்றும் பாலிடெக்னிக்குகளிலும் சேர்த்தல் குறித்து பரிசீலிக்கப்படும். |
| 5 | சாலையோர வசதி மையங்கள் அமைத்தல் | தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் முக்கிய மாவட்டச் சாலைகளில் 'பொதுத்துறை–தனியார் பங்கேற்பு' மூலம் சாலையோர வசதி மையங்களை பன்னிரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் (2012–2017) ஏற்படுத்த, தமிழக அரசு நெடுஞ்சாலைத் துறை மற்றும் மாவட்ட ஆட்சியர்களிடம் பொருத்தமான இடங்களைக் கண்டறியுமாறு கோரப்பட்டுள்ளது. இது குறித்து |

| | | |
|---|---|---|
| | | அரசாணையும் வெளியிடப்பட்டுள்ளது (அரசாணை (4டி) எண்.1, சுற்றுலா மற்றும பண்பாட்டு(சு1) துறை, நாள் 23–9–2011). மத்திய அரசு 2012–2013ஆம் ஆண்டில் இரண்டு திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கும். |
| 6 | 'சுத்தமான கழிவறை' பிரச்சாரம் | அனைத்து சுற்றுலாத் தலங்களிலும் உயர்தரமான கழிவறைகள் மற்றும் ஓய்வு அறைகளை பொதுத்துறை தனியார் பங்கேற்பு மூலம் உருவாக்குவதற்கு ஒரு சீரிய திட்டத்தை சுற்றுலாத்துறை தீட்டி வருகிறது. மத்திய அரசு இத்திட்டத்திற்காக 2012–2013ஆம் ஆண்டில், "சுத்தமான இந்தியா – பிரச்சாரம்" திட்டத்தின் கீழ் நிதி உதவி அளிக்க முன்வந்துள்ளது. |
| 7 | ஹெலிகாப்டர் சுற்றுலா, உல்லாச கப்பல் சுற்றுலா மற்றும் ரோப் கார் திட்டங்களை செயல்படுத்துதல் | உதகமண்டலம், கொடைக்கானல் மற்றும் இராமேசுவரம் போன்ற முக்கிய சுற்றுலாத் தலங்களை ஹெலிகாப்டர் சேவை மூலம் இணைத்திட, இந்திய ஹெலிகாப்டர் கார்பரேசன் (பவன் ஹன்ஸ்) மற்றும் ஹெலிகாப்டர் டாக்சி நடத்துவோரிடம் தொடர்பு கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| | | சென்னை துறைமுக பொறுப்புக் கழகம் மற்றும் தூத்துக்குடி துறைமுக பொறுப்புக் கழகத்துடன் இணைந்து, ‘உல்லாச கப்பல் சுற்றுலா’ திட்டம் மேம்படுத்தப்படும். பி அண்டு ஓ, ராயல் கரிபீயன், ராயல் நார்வேஜியன் போன்ற ஆடம்பர கப்பல்கள் அடிக்கடி தமிழக துறைமுகங்களுக்கு வருகை புரிகின்றன. நீர் விளையாட்டுகள் மற்றும் வாட்டர் டாக்சிகளை சென்னை மெரினா கடற்கரையில் அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ரோப் கார் திட்டத்தை மேம்படுத்த பொருத்தமான இடங்கள் கண்டறியப்பட்டுள்ளன. |

## தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், மாநிலத்தில் உள்ள அனைத்து சுற்றுலாத் தலங்களிலும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கத்துடன் **30–6–1971** அன்று உருவாக்கப்பட்டது. இக்கழகம் ஐந்து தங்கும் விடுதிகள் மற்றும் இரண்டு பேருந்துகளுடன் தொடங்கப்பட்டது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் விரைவான முன்னேற்றம் கண்டு தற்போது **55** தங்கும் விடுதிகள் மற்றும் **23** பேருந்துகளுடன் திறம்பட செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், உதகமண்டலம், கொடைக்கானல் மற்றும் ஏற்காடு ஆகிய சுற்றுலாத் தலங்களில், சாதாரண சுற்றுலாப் பயணிகள் மற்றும் மாணவர்கள் மிகக் குறைந்த செலவில் கோடை பருவ காலத்தில் கூட தங்கி பயனடையும் வகையில் இளைஞர் தங்கும் விடுதிகளை நடத்தி வருகிறது.

**விடுதிகள்**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தற்போது **25** விடுதிகளை இயக்கி வருகிறது. இந்த **25** விடுதிகளில் மொத்தம் உள்ள **777** அறைகளில் **506**

அறைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. மீதமுள்ள அறைகளையும் படிப்படியாக மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சுற்றுலாப் பயணிகள் தங்களது அலைபேசி மூலம் சுற்றுலா பயணம் மற்றும் விடுதிகளில் அறை முன்பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மேற்கொண்டு வருகிறது. இத்திட்டம் விரைவில் தொடங்கப்படும். மேலும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக விடுதிகளின் பராமரிப்புப் பணிகளை அயலாக்கம் (outsource) மூலம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழத்தில் மின்னாளுமைக்கான முன்முயற்சி**

இணையதளம் மூலம் சுற்றுலாப்பயணம் மற்றும் விடுதிகளில் தங்குவதற்கு நேரடி முன்பதிவு செய்யும் முறையை இந்தியாவில் முதன் முதலாக அறிமுகப்படுத்திய மாநில சுற்றுலா வளர்ச்சிக் கழகம் என்ற பெருமையை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பெற்றுள்ளது. இதன் மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 2011-12ஆம் ஆண்டில் ரூபாய் 280 இலட்சம்

வருவாய் ஈட்டியுள்ளது. கடந்த ஆண்டு 2010–11–ல் ஈட்டிய ரூபாய் 215 இலட்சம் வருவாயை விட 30 விழுக்காடு அதிகரித்துள்ளது.

**படகு குழாம்கள்**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் படகு குழாம்கள் முட்டுக்காடு, முதலியார்குப்பம், பிச்சாவரம், ஏற்காடு, கொடைக்கானல், குற்றாலம், ஊட்டி மற்றும் பைகாரா ஆகிய இடங்களில் உள்ளன. இவ் வளர்ச்சிக் கழகம், 32 இருக்கைகளுடன் கூடிய நவீன விரைவுப் படகை 12–1–2012 அன்று முதலியார்குப்பம் படகு இல்லத்தில் தொடங்கி, இயக்கி வருகிறது. மேலும், பழைய படகுகளை மாற்றிவிட்டு புதிய படகுகளைப் பயன்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தனது நிர்வாகத்தில் உள்ள அனைத்து படகு குழாம்களிலும் உயிர் காக்கும் மிதவைகளை (Life Jacket) பயணிகள் அணிவதை கட்டாயமாக்கி, செயல்படுத்தி வருகிறது.

**போக்குவரத்துப் பிரிவு**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தற்போது அரை நாள் முதல் **15** நாட்கள் வரை பயணம் மேற்கொள்ளத்தக்க சுற்றுலாக்களை தனது **23** சொகுசு பேருந்துகள் மூலம் இயக்கி வருகிறது. சுற்றுலாப் பயணிகளின் பயன்பாட்டிற்கென **30** விதமான சுற்றுலாக்களை தற்போது நடத்தி வருகிறது. மேலும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், அரசுப் பணியாளர்கள் தங்களது விடுமுறைப் பயணச் சலுகைகளை பயன்படுத்திக் கொள்ளும் வகையில் விடுமுறை பயணச் சலுகை சுற்றுலாக்களையும் நடத்தி வருகிறது. அனைத்து நவீன வசதிகளுடன் கூடிய புதிய சொகுசு பேருந்துகளை அறிமுகப்படுத்தவும் உரிய நடவடிக்கையை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மேற்கொண்டு வருகிறது.

**சிறப்பு தொகுப்புச் சுற்றுலா**

**அனைவருக்கும் இடைநிலைக் கல்வி திட்டம் (ராஷ்டிரீய மத்யமிக் ஷிக்ஷா அப்யான்)**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், ராஷ்டிரீய மத்யமிக் ஷிக்ஷா அப்யான் திட்டத்தின் கீழ் பள்ளி

ஆசிரியர்களுக்கான தொகுப்பு சுற்றுலாவை பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் பள்ளிக் கல்வித் துறையின் ஒருங்கிணைப்புடன் மிகச் சிறப்பாக நடத்துகின்றது. இதன் மூலம் ரூ.3.09 கோடி வருவாய் ஈட்டியுள்ளது.

இதுபோன்ற தொகுப்பு சுற்றுலாக்கள் தவிர, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சுற்றுலாப் பயணிகளின் தேவைக்கேற்ப சிறப்பு சுற்றுலாக்களையும் ஏற்பாடு செய்து நடத்தி வருகிறது. மலேசியா போன்ற வெளிநாடுகளிலிருந்து வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கும் மற்றும் வணிக நிறுவனத் துறையினருக்கும் சிறப்பு தொகுப்புச் சுற்றுலாக்களையும் நடத்தி வருகிறது.

**புதிய சுற்றுலாக்கள் அறிமுகம்**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் தற்போதுள்ள சுற்றுலாக்களுடன் கூடுதலாக கீழ்காணும் 10 புதிய சுற்றுலாக்களை 2012–2013ஆம் நிதியாண்டில் தொடங்கிட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது:–

1) நகரத்தார் கோயில்கள் சுற்றுலா
2) காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்ட திவ்ய தேச கோயில்கள் சுற்றுலா

3) திருக்கடையூர் கோயில் சுற்றுலா

4) திருவுடைஅம்மன், வடிவுடை அம்மன் மற்றும் கொடியிடை அம்மன் கோயில்கள் சுற்றுலா

5) மதுரை மாநகர் சுற்றுலா

6) திருச்சிராப்பள்ளி மாநகர் சுற்றுலா

7) குற்றாலம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகள் சுற்றுலா

8) ஏலகிரி மலைச் சுற்றுலா

9) கொல்லி மலைச் சுற்றுலா

10) சுதந்திரப் போராட்ட வீரர்கள் நினைவிடங்களின் சுற்றுச் சுற்றுலா

இச்சுற்றுலாக்கள் விரைவில் தொடங்கப்படவுள்ளன.

**பொருட்காட்சிப் பிரிவு**

38–வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி 3–1–2012 அன்று தொடங்கப்பட்டது. இப்பொருட்காட்சியில் பல்வேறு அரசுத் துறைகள், அரசு சார் நிறுவனங்களின் நல்வாழ்வுத் திட்டங்கள் மற்றும் வளர்ச்சித் திட்டங்களின் மாதிரி வடிவமைப்புகள் மக்கள் மனதைக் கவரும் வண்ணம் அமைத்திருந்தன. இந்த

பொருட்காட்சி இதுவரை எந்த ஆண்டிலும் இல்லாத அளவிற்கு அதிக அளவில் இலாபமாக ரூ.2.54 கோடி ஈட்டியுள்ளது. இது கடந்த ஆண்டு ஈட்டிய ரூ.2.06 கோடி இலாபத்தை விட அதிகமாகும்.

## நிதி நிலை செயல்பாடு

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 2011–12–ல் ரூ.101.60 கோடி விற்பனை அளவு அடைந்துள்ளது. இது கடந்த ஆண்டின் (2010–2011) விற்பனை அளவான ரூ.92.72 கோடியை விட 10 விழுக்காடு அதிகமாகும். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் கடந்த ஆண்டு (2011 –12) நிகர இலாபம் ரூ.10.69 கோடி. இது முந்தைய ஆண்டின் (2010–11) நிகர இலாபமான ரூ.2.64 கோடியை விட 305 சதவிதம் அதிகமாகும்.

எஸ்.கோகுல இந்திரா
சுற்றுலாத் துறை அமைச்சர்

–x-x-x-x-x-x-x–

## இணைப்பு – 1

### தமிழ்நாடு சுற்றுலா ஓர் கண்ணோட்டம்

| | | |
|---|---|---|
| 1. சுற்றுலா அலுவலகங்கள் (தமிழ்நாட்டில்–18, வெளி மாநிலங்களில்–6) | : | 24 |
| 2. சுற்றுலா தகவல் மையங்கள் (தமிழ்நாட்டில்–17, வெளி மாநிலங்களில்–6) | : | 23 |
| 3. உலக பாரம்பரிய சின்னங்கள் | : | 5 |
| 4. மாநில தொல்பொருள் துறையினரால் பராமரிக்கப்படும் சின்னங்கள் | : | 85 |
| 5. மைய அரசு தொல்பொருள் துறையால் பராமரிக்கப்படும் சின்னங்கள் | : | 247 |
| 6. கோட்டைகள் | : | 11 |
| 7. அருங்காட்சியகங்கள் | : | 21 |
| 8. இந்துசமய அறநிலையத் துறையினரால் பராமரிக்கப்படும் கோவில்கள் | : | 38436 |
| 9. பெரிய துறைமுகங்கள் | : | 3 |
| 10. பெரிய மலைவாசஸ்தலங்கள் | : | 12 |

11. இரண்டாவது நீளமான கடற்கரை : மெரினா (சென்னை) 13 கி.மீ.

12. தமிழ்நாட்டின் உயரமான மலைச் சிகரம் : தொட்டபெட்டா (2636 மீட்டர்)

13. பன்னாட்டு விமான நிலையங்கள் : 1

14. உள்நாட்டு விமான நிலையங்கள் : 6

15. தமிழ்நாட்டில் உள்ள மொத்த ரயில் பாதை : 3941 கி.மீ.

16. மொத்த இளைஞர் விடுதிகள் : 7

17. தமிழ்நாட்டில் உள்ள மொத்த தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்கள் : 55

18. மொத்த படகு இல்லங்கள் : 9

19. மொத்த பேருந்துகள் : 25

20. மொத்த தொலைநோக்கு இல்லங்கள் : 3

21. பொழுதுபோக்கு பூங்காக்கள் : 23

## இணைப்பு – 2

## சுற்றுலா அலுவலகங்கள் மற்றும்

## சுற்றுலா தகவல் மையங்கள்

### தமிழ்நாட்டில் செயல்படும் சுற்றுலா அலுவலகங்கள்

1) சென்னை
2) கன்னியாகுமரி
3) உதகமண்டலம்
4) கொடைக்கானல்
5) மாமல்லபுரம்
6) மதுரை
7) இராமேசுவரம்
8) தஞ்சாவூர்
9) திருச்சிராப்பள்ளி
10) திருநெல்வேலி
11) சேலம்
12) தருமபுரி
13) சிதம்பரம்
14) பூம்புகார்
15) வேலூார்
16) கோயம்புத்தூார்
17) காரைக்குடி
18) திருவண்ணாமலை

**பிற மாநிலங்களில் செயல்படும் சுற்றுலா அலுவலகங்கள்**

1) புதுதில்லி
2) மும்பை
3) கொல்கத்தா
4) கோவா (பனாஜி)
5) ஜெய்ப்பூர்
6) ஆக்ரா

**தமிழ்நாட்டில் செயல்படும்**
**சுற்றுலாத் தகவல் மையங்கள்**

**அ) விமான நிலையங்கள்**

1) சென்னை (பன்னாட்டு விமான நிலையம்)
2) சென்னை (உள்நாட்டு விமான நிலையம்)
3) மதுரை
4) கோயம்புத்தூர்
5) திருச்சிராப்பள்ளி

**ஆ) இரயில் நிலையங்கள்**

1) சென்னை (சென்ட்ரல்)
2) சென்னை (எழும்பூர்)
3) மதுரை
4) கோயம்புத்தூர்
5) இராமேசுவரம்
6) திருச்சிராப்பள்ளி
7) திருநெல்வேலி

**இ) பேருந்து நிலையம்**

1) சென்னை மாநகர பேருந்து நிலையம், கோயம்பேடு

**ஈ) பிற இடங்கள்**

1) கூடலூர் (நீலகிரி மாவட்டம்)
2) ஓட்டல் தமிழ்நாடு வளாகம், தஞ்சாவூர்
3) பாஞ்சாலங்குறிச்சி (தூத்துக்குடி மாவட்டம்)
4) இராமநாதசுவாமி திருக்கோவில் வளாகம், இராமேசுவரம்.

**பிற மாநிலங்களில் செயல்படும் சுற்றுலாத் தகவல் மையங்கள்**

| | இடம் | மாநிலம் |
|---|---|---|
| 1) | இரயில் நிலையம் | பெங்களூரு கர்நாடகம் |
| 2) | ஐதராபாத் | ஆந்திரப்பிரதேசம் |
| 3) | திருவனந்தபுரம் | கேரளா |
| 4) | அகமதாபாத் | குஜராத் |
| 5) | புவனேஷ்வர் | ஒரிசா |
| 6) | லக்னோ | உத்தரப்பிரதேசம் |

# இணைப்பு – 3

## தமிழ்நாட்டில் உள்ள பாரம்பரிய நகரங்கள்

| வ. எண். | பாரம்பரிய நகரம் | மாவட்டம் |
|---|---|---|
| 1.<br>2.<br>3. | காஞ்சிபுரம்<br>மாமல்லபுரம்<br>ஸ்ரீபெரும்புதூர் | காஞ்சிபுரம் |
| 4.<br>5.<br>6.<br>7.<br>8.<br>9. | சிதம்பரம்<br>பிச்சாவரம்<br>மருதூர்<br>குறிஞ்சிபாடி<br>மரக்காணம்<br>திருவந்திபுரம் | கடலூர் |
| 10.<br>11.<br>12. | இராமேசுவரம்<br>வாலிநோக்கம்<br>சேதுக்கரை | இராமநாதபுரம் |
| 13. | ஸ்ரீரங்கம் | திருச்சிராப்பள்ளி |
| 14. | ஸ்ரீவில்லிபுத்தூர் | விருதுநகர் |
| 15.<br>16. | தஞ்சாவூர்<br>கும்பகோணம் | தஞ்சாவூர் |
| 17. | கங்கைகொண்ட சோழபுரம் | அரியலூர் |
| 18. | மதுரை | மதுரை |
| 19. | பழனி | திண்டுக்கல் |
| 20. | திருச்செந்தூர் | தூத்துக்குடி |
| 21.<br>22. | திருத்தணி<br>திருவள்ளூர் நகரம் | திருவள்ளூர் |

| | | |
|---|---|---|
| 23.<br>24.<br>25. | கன்னியாகுமரி<br>பத்மநாபபுரம்<br>குளச்சல் | கன்னியாகுமரி |
| 26. | திருவண்ணாமலை | திருவண்ணாமலை |
| 27.<br>28.<br>29. | செஞ்சி<br>பரிக்கல்<br>திருவக்கரை | விழுப்புரம் |
| 30.<br>31.<br>32.<br>33.<br>34. | செட்டிநாடு<br>காரைக்குடி<br>இடைக்காட்டூர்<br>பிள்ளையார்பட்டி<br>காளையார்கோயில் | சிவகங்கை |
| 35.<br><br><br>36. | நவதிருப்பதிகள்<br>அ) திருக்காலூார்<br>ஆ) குரும்பூர்<br>மணப்பாடு | தூத்துக்குடி |
| 37.<br>38.<br>39.<br>40. | தரங்கம்பாடி<br>பூம்புகார்<br>நாகூர்<br>வேளாங்கன்னி | நாகப்பட்டினம் |
| 41.<br>42. | குற்றாலம்<br>திருநெல்வேலி | திருநெல்வேலி |
| 43. | திருச்செங்கோடு | நாமக்கல் |
| 44. | பேரூர் | கோயம்புத்தூர் |
| 45. | பவானி | ஈரோடு |
| 46.<br>47.<br>48.<br>49. | சித்தன்னவாசல்<br>ஆவுடையார்கோயில்<br>திருமயம்<br>விராலிமலை | புதுக்கோட்டை |